2023 ஏப்ரல் 5]

108—

தெப்ப உற்சவத் திருவிழா

***14263—திரு. எஸ். தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளியசுவாமி திருக்கோயில் திருக்குளத்தைச் சீரமைத்து தெப்ப உற்சவத் திருவிழா நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளியசுவாமி திருக்கோயிலுக்கு 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் தெப்பக் குளத்தைச் சீரமைப்பதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 15 சதவிகிதப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. அந்தக் குளத்தைச் சுற்றி கண்மாய்கள் அமைந்திருப்பதால், மழைக் காலங்களில் அதிகமான நீர் தேங்கி, குளத்திலும் நீர் அதிகமாகி நீரை வெளியேற்றி அந்தப் பணிகளைத் தொடங்க வேண்டிய சூழ்நிலையிருப்பதால் சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. அடுத்த தெப்பத் திருவிழாவிற்குள் அந்தக் குளம் சீரமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவதானம் மேற்கே உள்ள அருள்மிகு தவம் பெற்ற நாயகி திருக்கோயில் தெப்பத் திருவிழாவை நடத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

ராஜபாளையம் தொகுதி, தேவதானம் மேற்கே உள்ள அருள்மிகு தவம் பெற்ற நாயகி திருக்கோயிலுக்கு நான்கு கோடி

ரூபாய் நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ராஜபாளையம் தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே பதிலும் அமைந்திருக்கிறது. நன்றியும் சொல்லிவிட்டார். அதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அவருக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதியில், அருள்மிகு மயூரநாத சுவாமி திருக்கோயில் உள்ளது. ராஜபாளையம் தொகுதியில் உள்ள ஏழையெளிய மக்கள் திருமணம் செய்ய வேண்டுமென்றால் தனியார் திருமண மண்டபத்தில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் முதல் ஐந்து இலட்சம் ரூபாய் வரை வாடகை செலுத்த வேண்டிய நிலைமை உள்ளது. எனவே, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், கோயில் அருகிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் குளிர்சாதன வசதியுடன் திருமண மண்டபம் அமைக்க வேண்டும். மேலும், இக்கோயிலுக்கு அன்னதான திட்டத்தைச் செயல்படுத்தி, விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2023 ஏப்ரல் 5]

கோரிய மயூரநாதசுவாமி திருக்கோயில் என்பது பெத்தவநல்லூர் ராஜபாளையத்தில் அமைந்திருக்கின்ற திருக்கோயில் ஆகும். ஏற்கெனவே, இந்தத் திருக்கோயிலுக்கு மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், PACR *சேதுராமம்மாள் பெயரில் 12—5—1973 அன்று திருமண மண்டபத்தைத் திறந்து வைத்திருக்கிறார். அந்த மண்டபத்தைப் புனரமைத்து, மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிறபோது வருகின்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ரூ.1 கோடி அளவிலே* estimate *தயாரிக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற மண்டபம் புதுப்பித்துத் தரப்படும். அதன் பிறகும் தேவை என்றால், புதிதாக மண்டபம் கட்டுவது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு முயற்சிப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்திபெற்ற திருக்கோயிலான உண்ணாமுலையம்மை உடனமர் அண்ணாமலையார் திருக்கோயிலின் வடக்கு கோபுரத்தை எனது செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த அம்மணியம்மாள் அவர்கள் கட்டித் தந்தார்கள். அந்தக் கட்டடப் பணி நடைபெறுகின்றபோது அங்கு கட்டடத் தொழிலாளர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட அம்மணியம்மாள் மண்டபம், பக்கத்திலே இருக்கின்ற இடம் ஆகியவை இந்து முன்னணியைச் சேர்ந்த திரு. சங்கர் என்பவரால் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி, அந்த ஆக்கிரமிப்பு சமீபத்தில் அகற்றப்பட்டபோது, அவர் அடியாட்களோடு வந்து தடுத்திருக்கிறார். அந்த ஆக்கிரமிப்பை முழுமையாக அகற்றவும், அம்மணியம்மாள் மண்டபத்தைப் புதுப்பித்துத் தரவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 259 ஆண்டுகளுக்கு முன்பு வடக்கே அமைந்திருக்கின்ற திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குக் கோபுரம் கட்ட வேண்டி, நன்கொடையாளர், அம்மணியம்மாள் என்ற ஒரு விவசாயி, அந்த மண்டபத்தைக் கட்ட வேண்டுமென்று மண்டபத்தின் எதிரிலேயே வாழ்நாள் முழுவதும் அமர்ந்து, மண்டபத்தைக் கட்டி முடித்து, அந்த மண்டபத்திற்கு அம்மணியம்மாள் மண்டபம் என்ற பெயரையும் சூட்டினார். அந்த மண்டபம் 25 ஆயிரத்து 247 சதுரடி கொண்ட மண்டபம். அந்த மண்டபம் மற்றும் இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப் பிரிவு 6, உட்பிரிவு 17–ன்படி, இந்து சமய அறக்கட்டளைக்குச் சொந்தமான இடம். நாளடைவில் தனியார் 5 பேர் ஒன்றுகூடி அந்த இடத்தை, அந்த Trust–ஐயே அவர்களுடைய பெயரில் மாற்றி பதிவு செய்துகொண்டு, 25 ஆயிரம் சதுரடியையும், அம்மணியம்மாள் மண்டபம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு, வீடுகள் கட்டியும் அதை சமூக விரோதச் செயல்களுக்கும் பயன்படுத்திக்கொண்டிருந்த நிலையில், அந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர், அருமை அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், கடந்த ஆண்டு அங்கிருந்து காலி செய்து தர வேண்டுமென்று ஆக்கிரமிப்பாளருக்கு விதி 78–ன்கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றம், இது இந்து சமய அறக்கட்டளைக்குச் சொந்தமானது என்பதால் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

நம்முடைய மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்கள் அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்குண்டான அனைத்து உதவிகளையும் இந்து சமய அறநிலையத் துறைக்குச் செய்து கொடுத்து, 25 ஆயிரத்து 247 சதுரடி கொண்ட அந்த நிலத்தை மீட்டிருக்கின்றோம். யார் ஆக்கிரமித்தார்கள் என்பது கேள்வி அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், திருக்கோயில் நிலங்கள், இறை சொத்து இறைவனுக்கே சொந்தம் என்ற தாரக மந்திரத்தின்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளால், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, 25 ஆயிரத்து 247 சதுரடி இடம் மீட்கப்பட்டிருக்கிறது. அங்கே, 259 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அம்மணியம்மாள் மண்டபம், ஆக்கிரமிப்பாளர்கள் கட்டடத்திற்குள் இருந்ததால்,

2023 ஏப்ரல் 5]

அந்த இடிபாடுகளை அகற்றுகின்றபோது அம்மணியம்மாள் மண்டபமும் சற்று சேதாரம் அடைந்திருக்கிறது. இதை மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களும், நானும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், அம்மணியம்மாளுக்கு ஏற்கெனவே இருந்ததைவிட சிறந்த முறையில் ஒரு மண்டபத்தை அங்கு அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சிதிலமடைந்திருக்கின்ற அந்த மண்டபத்தை முழுவதுமாகப் புதிய மண்டபமாக. புதுப் பொலிவுடன், பார் உள்ளளவு, கடல்நீர் உள்ளளவு அம்மணியம்மாள் புகழ் இருக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவோடு அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

நூலகம் அமைத்தல்

***64844—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கம்மந்தூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொதுவாக இதுபோன்ற கேள்விகளுக்குப் பலமுறை நான் பதில் அளித்திருக்கின்றேன் என்று சொன்னாலும், தொடர்ந்து இதுபோன்ற கேள்விகள் கேட்கப்படும்போது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS